தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௫௪	திருவள்ளுவர் யாண்டு ௨௲௧௨ இரௌத்திரி தை 1981- சனவரி - பிப்ரவரி	மலர் ௧௨

பாரதி - ஒரு திருப்புமுனை.

ம. மதியழகன் எம். ஏ., எம். பில்.,

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒவ்வொரு பாவேந்தரும் ஒவ்வொரு வகையில் தனித்தன்மை பெற்று மிளிர்கின்றனர்- வான் மறை செய்த வள்ளுவன் தமிழகம் மட்டுமல்லாமல் உலகமெல்லாம் ஒப்பக்கூடிய கருத்துக்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்ததில் பெருஞ் சிறப்பு எய்தினான். மேலும் ஆசிரியப்பா, கலிப்பா என்ற வகையில் இலக்கியங்கள் அமைந்ததை மாற்றி வெண்பாவில் பாக்களைப் புனைந்து ஒரு திருப்புமுனையை உண்டாக்கினான். வேந்தர்களைப் பாட்டுடைத் தலைவர்களாக வைத்துப் பாடிய மரபை மாற்றிக் குடிமக்கள் காப்பியம் செய்து புரட்சி செய்த பெருமை பெற்றார் இளங்கோவடிகள். மேலும் தனிப் பாக்களாகத் திகழ்ந்த நிலை மாற்றிக்கதை அடிப்படையில் காப்பியம் பாடி ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தினார்.

சீத்தலைச்சாத்தனாரின் பௌத்த சமயக் காப்பியத்திற்கு ஈடாக சமயக்காப்பியம் படைத்ததோடு மட்டுமல்லாமல் விருத்தப்பாவால் காவியம் படைத்துத் திருப்புமுனையை உருவாக்கினார் திருத்தக்கத் தேவர். பாநலத்தாலும் பாத்திரப் படைப்பாலும் முதனூலை விஞ்சுகின்ற அளவிற்குக் காவியம் படைத்துக் கவிச்சக்கரவர்த்தி எனப் போற்றப்படுமளவிற்குக் காவிய உலகில் திருப்புமுனை செய்தவன் கம்பன். உயர்ந்த சாதியினர்க்கே வீடுபேறு—கடவுள் காட்சி என்ற நிலைமாற்றி வேடர், வள்ளுவர், குயவர் போன்ற சாதியினரும் அவ்வருள் பெறலாம் என்பதைத் தனது பெரியபுராணம் மூலம் காட்டிப் பக்திசுவை சொட்டச்சொட்டப் பாடிய சேக்கிழாரும் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியவரே.

இதற்குப் பின்னரும் 'வெண்பாவிற்குப் புகழேந்தி. பரணிக்குச் செயங்கொண்டார்' கலம்பகத்திற்கு இரட்டையர்,

வசைபாடக் காளமேகம்' என்ற முறையில் தனிச்சிறப்பு பெற்றவர்களுமுண்டு. இப்பெருங் கவிஞர்கள் எல்லோரும் ஒவ்வொரு தனித் தன்மையால் தமிழ் இலக்கிய வரலாற்றில் மட்டுமே சிறந்து விளங்குகின்றனர். ஆனல் பாட்டுக்கொரு புலவன் பாரதியோ இந்திய வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, தனி மனித வரலாறு ஆகிய மூன்றிலும் தனித் தன்மை பெற்று விளங்கும் தரமுடையவனுகக் காணப்படுகின்ருன்.

அடிமை வாழ்வு வாழ்கின்ருேம் என்பதை அறியாத மக்களுக்கு விடுதலை வேட்கையைத் தம் வீறுகொண்ட பாடல்களால் எழுப்பியதன் மூலம் இந்திய வரலாற்றிலும் கற்ருேரே கவிநலனை உய்த்துணரும் கவித்துவத்தை மாற்றி மற்ருேரும் நடைமுறையில் பாடும்படி எளிமை, இனிமை, புதுமை முதலியன புகுத்தியதால் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், பார்ப்பன குலத்தில் தோன்றியும் அக்குலக் கொள்கைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், சாதிவிடுதலை பெண்விடுதலை முதலியவற்றைத் தன் கொள்கையாகக்கொண்டு வாழ்ந்ததால், தனி மனித வரலாற்றிலும் புரட்சியை ஏற்படுத்தித் தனியிடம் பெற்றுத் திகழ்கின்ருன் பாரதி.

இந்திய வரலாற்றில் பாரதி :—

திலகரின் தொண்டனுக, வ. உ. சி., சுப்பிரமணிய சிவம் போன்றவர்கட்கு உற்ற நண்பனுக வாழ்ந்து, ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு அடங்காது தன் கவிதை மூலம் எதிர்ப்பைக் காட்டியவன் பாரதி, கவிஞனுக மட்டுமல்லாது, ''இந்தியா' 'சுதேசமித்திரன்'' போன்ற நாளிதழ்களுக்கு ஆசிரியராகவும் இருந்து அன்றைய ஆங்கில ஆட்சியைக் கடுமையாக விமரிசித்தவன் பாரதி.

விடுதலை வரலாற்றில் எக்கவிஞனும் நினைத்துப் பார்க்காத காணுத இந்திய விடுதலையைத் தனது தனிக் கண்ணுல் முன்னரே கண்டு கூறியவன் பாரதி.

''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்தச் சுதந்திரம் அடைந்து விட்டோம் — என்று
ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே''

இந்தியா விடுதலை அடைந்த போது, உயிரோடிருந்து காணுத பாரதி, இந்தியாவின் விடுதலையைத் தன்னுடைய உயிர்க்கவிதையில் கண்டான்.

இந்திய ஒருமைப்பாட்டில் பாரதி ஈடிலா நம்பிக்கை வைத்திருந்தான். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கொள்கை

யைத் தம் பாடல் மூலம் உணர்த்தியவன் பாரதி. வங்கக்கவி தாகூர் 'ஜனகணமன' என்ற பாடலில் பல மாநிலங்களைக் குறிப்பிட்டு எல்லாம் பார்தநாடே என்றார் பாரதியும்.

'சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன்நாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து'

தனது ஒருமைப்பாட்டைக் காட்டியதோடு

'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்'

என்றதன் மூலம் உலக ஒருமைப்பாட்டிற்கே ஓர்எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தார்.

'பாரதநாடு பார்க்கெல்லாம் திலகம்
நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்'

என்ற இந்திய உணர்வை மக்கட்கு நினைவூட்டிய பாரதி தமிழ் நாட்டை மறக்கவில்லை. பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் போற்றப்படக்கூடிய ஒன்று என்பதை உணர்த்த பாரதி.

'தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா'

என்று பாப்பாவிற்கு உணர்த்தியதின் மூலம் ஒவ்வொருவருக்கும் அவருடைய மாநிலம் உயர்ந்ததே என்பதை உணர்த்தாமல் உணர்த்துகின்றார்:

தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதி:

பாரதி தமிழ் மட்டும் அறிந்தவனல்ல, ஆங்கிலம், பிரஞ்ச் போன்ற மேலை மொழிகளையும், இந்தி, சமற்கிருதம் போன்ற வட மொழிகளையும் தெலுங்கு போன்ற திராவிட மொழிகளையும் அறிந்திருந்தான். இவ்வளவு மொழிகளிலுமுள்ள இலக்கிய நுட்பங்களை நன்குணர்ந்து அவை தமிழிலக்கியங்கட்கு ஈடாகா என்பதைத் தெளிந்து

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்'

என்று புகழ்ந்து, இது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை என்றும் அறுதியிட்டுக் கூறுகின்றான்.

இலக்கியங்களின் பயன் அவை சமுதாயத்திற்குப் பயன் அளிக்க வேண்டும். பலன்விளைவிக்க வேண்டுமானால் அது சாதாரண பாமர மக்களின் உள்ளத்தை ஈர்க்கக் கூடியதாக இருக்கவேண்டும். தமது தமிழ் இலக்கியங்கள் இசையாலும், இன்சுவையாலும் இன்னும் பிறவற்றாலும் உயர்ந்தே விளங்கின. ஆனால் அவை அரசவை மண்டபத்திடத்தும் ஒரோவழி சில அறிஞர்களிடத்துமே நின்று நிலவின. பாமரமனிதனின் உள்ளத்தை அவை தொட முடியவில்லை. அந்நிலையைமாற்றி நொண்டிச்சிந்து, காவடிச்சிந்து போன்ற இனிய இசையில் பாமர மக்களைக் கவரும் வகையில் எளிமையாக அதே நேரத்தில் இனிமையாகக் திகழும்வண்ணம் புதுமையைச் செய்தவர் பாரதி. பாமர மக்களின் இதழ்களில் படரும்படியாகப் பாடல்களை அமைத்து வெற்றி பெற்றவன் பாரதி என்பதில் சிறிதும் ஐயமில்லை.

'கண்ணன் பாட்டு' இவரது தத்துவ விளக்கத்திற்குச் சான்றாக அமைவது. ஆண்டாள் கண்ணனைத் தன் காதலனாகக் கண்டாள். அப்பர் இறைவனைத் தலைவனாகக் கொண்டார் சுந்தரர் கடவுளைத் தன் தோழனாகக் கொண்டு வழிப்பட்டார், சம்பந்தர் தன் தந்தையாக நினைத்துப் போற்றினர். ஆழ்வார்கள் கண்ணனைத் தங்கள் குழந்தையாகப் பாவித்துப் பாடிய பாக்கள் பல. இவற்றை யெல்லாம் உணர்ந்த பாரதி. இறைவனை ஒருவர் ஒரேகண்கொண்டு நோக்கும் நிலைமாற்றி ஒருவரே இறைவனை எம்படியும் நினைத்துப் பார்க்கலாம் என்பதைத் தோழனாக, தந்தையாக, தாயாக, காதலனாக, குருவாக, குழந்தையாகக் கொண்டு கண்ணன் பாட்டைப் படைத்திருப்பது பாங்குறக் காட்டுகிறது.

எந்தக் கருத்தைக் கூறினாலும் பாரதி வெறும் கவிஞனாக மட்டுமல்லாமல் திறனாய்வாளனாகவும் திகழ்கின்றான் மகாபாரதத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர் பாரதி.. அதனாற்றான் 'பாஞ்சாலி சபதம்' என்ற விடுதலைச் சபதத்தை அழகிய கவிதை வடிவத்தில் வடித்தார். பாரதக்கதை மாந்தரிடத்தே மிக்க மதிப்புக் கொண்டிருந்தவர் பாரதி என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால் அக்கதை மாந்தர்களில் துரியோதனன், துச்சாதனன் போன்றோர் தவறு செய்யும்போது மட்டும் அவர் கண்டிக்கவில்லை. தருமர் போன்ற உயர்ந்த பாத்திரங்கள் தவறு செய்யும்போதும் சுட்டிக்காட்டுகின்ற நடுவு நிலைகொண்ட திறனாய்வாளனாகத் திகழ்கின்றார் தருமன் மற்றவர்க்கு மூத்தவனாகவும், அறிவுரை கூறுபவனாகவும் திகழ்தவன்; தருமத்தின் வேலி என்று போற்றப்பட்டவன், அவன் செய்த தவறு சூதாடியது. அவ்வாறு அவன் சூதாடியது குற்றமே என்றும் கேவலமானதொரு செயல் என்றும் சுட்டுகின்றார்.

கோயில்பூசை செய்வோர் சிலையைக்கொண்டு
விற்றல் போலும்,

வாயில் காத்து நிற்போன் வீட்டை வைத்திழத்தல்
போலும்

ஆயிரங்களான நீதியை உணர்ந்த தருமன்

தேயம் வைத்திழந்தான்! சீச்சி! சிறியர். செய்கை
செய்தான்.

என்று சாடுகின்றார். கண்ணைமூடிக்கொண்டு கதை மாந்தர்கள் செய்யும் தவறினைச் சுட்டிக்காட்டாது பாராட்டும் மனங்கொண்ட காலத்தில் உயர்ந்த பாத்திரமான தருமனின் செய்கையைக் கண்டிக்குமிடத்தில் கவிஞனாக மட்டுமல்லாமல் சிறந்த திறனாய்வாளனாகவும் விளங்குகின்றார்.

புராணம் என்பது மக்களுக்குச் சுவையூட்டக் கூடிய கதைகள் பல கூறி, கருத்துக்களை விளங்க வைக்கும் ஒரு இலக்கியம், இப் புராணங்கள் கூறும் கதைகள் பெரும்பாலும் உண்மை கடந்த நிகழ்ச்சிகளாகவே காணப் படுகின்றன: அதனை உணர்ந்த பாரதி,

"நன்று புராணங்கள் செய்தார் — அதில்
நல்ல கவிதை பல பல தந்தார்.
கவிதை மிக நல்லதேனும் — அக்
கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்.

என்கிறார். புராணங்களைப் பற்றிய இத்தெளிவானதொரு கருத்தை எவரும் இதுவரையில் கூறிற்றிலர்.

தனிமனித வரலாற்றில் பாரதி :

பாரதி தன்னுடைய வாழ்க்கையில் ஆங்கிலேயரின் அடக்கு முறையை மட்டும் எதிர்க்கவில்லை, தனிமனித ஏற்றம், சாதிக் கொடுமை, பெண் அடிமை, மூடவழக்கம் ஆகியவற்றையும் எதிர்த்துப் போர்க்குரல் எழுப்பினார்.

ஆங்கிலக் கல்வி கற்பதைப் பெருமையாக எண்ணிக்கொண்ட அக்காலத்தில் ஆங்கிலக் கல்வியை அடியோடு வெறுத்தார், தந்தை தன்னை ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்பி வைத்தும் அதில் நாட்டஞ் செலுத்தாமல் தாய்மொழியையே போற்றினார், ஆங்கிலக் கல்வி

படிப்பவரை, "பேடிக் கல்வி பயின்றுலழல் பித்தர்கள்", என்று ஏசினர். தந்தைக்கு பணச் செலவும் தனக்கு பல இன்னலுந்தான் நேர்ந்தது என்றும் வேறு எப்பயனும் காணவில்லை என்றும் எடுத்தியம்பினர்.

"செலவு தந்தைக்கோ ராயிரம் சென்றது
தீதெனக்குப் பல்லாயிரம் சேர்ந்தது
நலமோர் எட்டுணையும் கண்டிலேன் — இதை
நாற்பதாயிரம் கோவிலில் சொல்லுவேன்"

என்று மிகவும் ஆவேசத்தோடு பேசுகின்றார்

பார்ப்பன இனத்திலே பிறந்திருந்தும் பார்ப்பனர்தம் மூடச் செயல்களையும் அவர்களுக்கெனத் தனி நீதியினைப் படைத்துக் கொண்ட ஈனச் செயலையும் துணிவுடன் எடுத்துக் கூறினர்.

"சூத்திரருக்கொரு நீதி — கண்ட
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடுமாயின் — அது
சாத்திரமன்று சதியெனக் கண்டோம்"

என்று சாடினர்.

பார்ப்பனர்க்குரிய நடைமுறை பழக்கவழக்கங்களையும் மேற்கொள்ளாது அதற்கு முரணாகவே நடந்து வந்தார். முறுக்கிவிடப்பட்ட மீசை, தலைப்பாகை, திருநீறுக்குப்பதில் திருநாமம் இடுதல், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த குழந்தையை தன் இல்லத்திலேயே வளர்த்தல் போன்றவற்றால் பாரதி தன் இனத்தாரோடு போட்டியிட்டுப் பெரும் புரட்சி செய்தார்.

பாரதி உண்மையான ஆத்திகக் கவிஞர். சக்தி வழிப்பட்டினர், இருப்பினும் கடவுள் பெயரால் கலகம் விளைவிக்கும் செயல்களைக் கடுமையாக எதிர்த்தார்: தெய்வத்தை முழுமையாக உணராமல் தங்களுக்குள் சண்டையிடும் பாமரரைக் கண்டு உள்ளம் பதைத்தார்.

"மூவகைப் பெயர் புனைந்தே — அவன்
முகமறியாதவர் சண்டைகள் செய்வார்
தேவர் குலத்தவன் என்றே — அவன்
செய்தி தெரியாதவர் சிலருரைப்பார்"

என்று உளம் நொந்து கூறுகின்றார், இந்த செய்கையினால் பாரதி

ஒரு முடிவுக்கு வந்து அறிவில்லாத அவர்களுக்கு இறிவுரையும் புகட்டுகின்றார்.

"உண்மையின்பேர் தெய்வம் என்போம் — மற்றை
ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்"

என்று தான் கண்ட உண்மையைக் கூறி மக்களை நல்வழிப்படுத்த முயல்கின்றார்? இவ்வாறு ஒரு ஆத்திகக் கவிஞர் நாத்திகக் கருத்து கூறுவதைப் பாரதியைத் தவிர வேறு எவரிடமும் காண இயலாது.

பெண்ணின் விடுதலைக்கு முதல் குரல் கொடுத்தவர் பாரதி நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையுங்கொண்ட பெண்ணைப் படைத்தவர் பாரதி. பெண்ணை அடிமையாகக்கொண்ட சமுகத்தை அவர் வெறுத்தார்.

"ஆதி மறைக்கீதம் அரிவையர் சொன்னதுபோய்
வீதிப் பெருக்கும் விலையடிமை ஆயினரே"

என்று உள்ளம் நொந்து கேட்கிறார் பின்னர்.

"பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லையென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை,

என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

பெண்களுக்குத் தான் கற்பு ஆண்களுக்கு அது தேவையில்லை என்ற நிலையை மாற்றி

"கற்புநிலையென்று சொல்லவந்தார் — இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

என்று நெஞ்சு நிமிர்த்தி கூறிய ஒரே கவிஞர் பாரதிதான்

வானம் பார்த்தறியாத குருடர் எல்லாம் கவிகள் என்று கூறிவரும் இந்நாளில் அணிசெய் காவியத்தின் கவியுளங் காண் கின்ற உண்மைக் கவிஞர் புரட்சிக் கவிஞராகத் திகழ்ந்ததோடு இந்திய வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தனி மனித வரலாற்றிலும் ஒரு திருப்பு முனையையும் ஏற்படுத்தினார் பாரதி. ஆம்! பாரதியே ஒரு திருப்பு முனை.

தொல்காப்பிய மெய்ம்மயக்க மரபுகள்

பேராசிரியர் ச. பாலசுந்தரம் கரந்தைப் புலவர் கல்லூரி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ரகர, ழகரங்கள் வல்லினநாவண்ண வருமொழிகளாதலின்' அவை இருமுறை தாமே ஒற்றுவாகலின் விலக்கப்பட்டன என்க.

இந்நூற்பாவிற்கு செட்டியாரவர்கள் உரை கூறி எடுத்துக் காட்டுகள் காட்டுமிடத்து அங்ஙனம் இங்ஙனம் ஆகிய சொற்கள் அங்கனம் இங்கனம் என்னும் சொற்களின் திரிபென்று கூறி விலக்கி விட்டு வேறு உதாரணங் காணாமையின்

''பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறு'' அரங்கம் மன வரும் அளபெடைச் சொற்களை உதாரணமாகக் காட்டியுள்ளார். அள பெடை என்பது ஒரெழுத்தே செய்யுட்கண் அசை நிறைத்தற் பொருட்டு நீளுதலன்றி இரண்டெழுத்துக்கள் அல்லவென்பதை அவர் எண்ணிலர். அன்றி

நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய
கூட்டி எழுஉதல் என்மனார் புலவர் என்றும்

குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்த குற்றெழுத்தே என்றும்

ஆசிரியர் கூறுதலான் இரண்டெழுத்தாகக் கொள்ளலாமெனின் — கூட்டி எழுப்புக என்றும் -- நின்றிசை நிறைக்கும் என்றதன்றி அவை நின்ற எழுத்தும் வரும் எழுத்துமாகிப் 'புணர்ந்தனவல்ல என்பதையும் அவை குறியீடே என்பதையும் இலக்கண ஆசிரியன்மார் தெளிவுறுத்தியுள்ளமையால் — அது பொருந்த தென்பது வெளிப்படை.

''அம்மூவாறும்'' (எழு—22) எனுதல் மெய்ந்நிலைசுட்டின் (எழு-30) என்பதீறாக உள்ள ஒன்பது (எட்டாகக் கொண்டனர் உரை யாசிரியன்மார் என்பது மேலே விளக்கப்பட்டது) நூற்பாக்களால் மெய்ம்மயக்க விதிகளையெல்லாம் வகுத்துக் கூறியுள்ளமையையும் அவற்றின் செம்பொருளையும் மேலே கண்டோம்.

இனி மொழி மரபினுள் மொழியமைப்புப்பற்றிக் கூறும்

யரழ வென்னும் மூன்று முன் ஒற்றக்
கசதப ஙஞநம ஈரொற்றுகும் — (எழு—மொழி—15)

அவற்றுள்

ரகார ழகாரம் குற்றொற் றாகா —'' (எழு — மொழி — 16)
செய்யுளிறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற்றாகும் — (எழு—மொழி—18)

என்னும் மூன்று நூற்பாக்களுள் முன்னைய இரண்டும் — மெய்ம் மயக்க விதி கூறுவதாகக் கருதி உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் பொருள் கூறியுள்ளனர், இவற்றை நூன்மரபிற் கூறிய மயக்கவிதி நூற்பாக்களோடு ஒதுங்கு கூறாமைக்கும் — மொழி மரபினுள் கூறியமைக்கும் காரணம், ஆண்டு வேற்றுமை நயம்பற்றிக் கூறப்பட்டது. ஈண்டு ஒற்றுமை நயம்பற்றிக் கூறப்பட்டது என்று இளம்பூரணரும், ஈரொற்று உடனிலையாதலின் ஈண்டு கூறப்பட்டது என நச்சினார்க்கினியரும் அமைதி கூறினர். வேங்கடராசுலுரெட்டியாரவர்கள் ''யரழ'' என்னும் நூற்பாவிற்குப் புதுமையானதொரு விளக்கங்கூறி அடுத்த நூற்பா உரையையும் அதற்கேற்ப விளக்கியுள்ளார் இவர்தம் கருத்துக்களின் பொருத்தமின்மையும் — இவற்றின் செம்பொருளையும் இனிக்காண்போம்.

மொழிமரபினுள் ஆசிரியர் பொதுவாக எழுத்துக்கள் மொழி நிலைமை எய்தும் இயல்புகளையும் தனி மொழிக்கண் எழுத்துக்கள் நிற்கும் — இயல்புகளையும். உயிரும் மெய்யும் சார்புமாகிய எழுத்துக்கள் மொழி மூன்றிடத்தும் நிற்கும் முறைமைகளையும் பற்றியே வகுத்துக் கூறியுள்ளார், இன்றேல் நூன் மரபு — மொழி மரபு எனப் பகுக்காமல் ''எழுத்தியல்'' என ஓரியலாகவே வைத்துக் கூறியிருப்பார்- எனவே மொழி மரபிற் கூறும் இலக்கணங்கள் தனியெழுத்துக்களைப்பற்றியவல்ல, மொழிக்கண் நிற்கும் எழுத்துக்களைப் பற்றியும் அம்மொழி மரபு பற்றியும் என்பது தெளிவாம்

அதனானே தனி மெய்யெழுத்துக்களைச் சுட்டிப் பேசுங்கால் அவற்றிற்கு அகரச் சாரியை கொடுத்து மொழிநிலைமைப்படுத்தி ''வல்லெழுத்தென்ப கசடதபற'' என்றாற்போல கூறினர்.

இவற்றை மொழி நிலைமைப்படுத்து உயிர்மெய்யெழுத்து போலக் கூறினும் இவை உயிர்ப்பில்லாத மெய் (ஒற்று) எழுத்துக்களே என உணர்த்துவாராய்

''மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் ஏனவிதி கூறினர்.

இங்ஙனம் மொழிபடுத்து மெய்யெழுத்துக்களைக் கூறுங்கால் கசடதபற — ஙஞணநமன எனத் தம்முள் மயங்காத எழுத்துக்களை வரிசைப்படுத்திக் கூற வேண்டியிருத்தலின் அதற்கு அமைதி கூறுவாராய்

தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்
மெய்ந்நில மயக்கம் மணமில்லை (எழுந்—மொழி—)

எனப் புறனடை செய்தார். ஈண்டு 'நிலை' என்றது மெய்யெழுத்துக்கள் மொழி மூவிடத்தும் நிற்கும் நிலையை—மயக்கம் என்றது மெய்ம் மயக்கத்தை என்க. இந்நுண்மையை ஓராமல் உரையாளர்கள் மெய்ந்நிலை மயக்கம் என்பவற்றை ஒருதொடராககவைத்து மெய்ம் மயக்கம் எனப் பொருள் கூறிச் சென்றனர்,

மற்று மெய்யெழுத்துக்கள் மொழி முதற்கண் வருங்கால் உயிரோடுகூடி யல்லது வாரா என விளங்குவார்

''உயிர்மெய் யல்லன மொழி முதலாக'' என விதித்தார். இதனுன் மொழி இடையிலும் இறுதியிலும். வருங்கால் அவை பட்டாங்கு மெய்ம்மையாக வந்து நிற்கும் என்பதும் உணர்த்தினுர். அவ்வாறு அவைமொழி இடையிலும் இறுதியிலும் வந்துநிற்குங்கால் ஒன்றேயன்றி இரண்டு வருதலும் உண்டு அங்ஙனம் இரண்டாக வருங்கால் இவை இவை இன்னவாறு வருமென அவற்றின் மரபுபற்றி

யரழ என்னும் மூன்றுமுன் ஒற்றக்
கசதப ஙஞநம ஈரொற்றுகும் என்றும்
அவற்றுள், ரகார ழகாரம் குற்றொற்றுகா, என்றும்
செய்யுளிறுதிப் போலி மொழிவயின்
னகாரமகாரம் ஈரொற்ருகும் என்றும் கூறினர்.

ஒரொற்று இடைவருதலை மயக்கவிதி கூறிய நூற்பாக்களால் உய்த்துணரவைத்தார். இறுதியில் வருதலை ''மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல் என்னும் நூற்பாவாற்கொள்ள வைத்தார் ஈறொற்று உடனிலையந்து வருதல் மொழியின்கண்ணதாய் வரையறையுடையவாகலின் அவற்றை விதந்து மொழிமரபினுள் ஓதுவாராயினர். மொழியிடையே வருதலை ''யரழ வென்றும் நூற்பாவாலும் இறுதிவருதலை'' செய்யுளிறுதிப் போலி மொழிவயின்'' என்னும் நூற்பாவாலும் ஓதினர்.

இவை ஈறொற்றுய் நிற்றற் கண்ணும் நூன்மரபிற் கூறிய விதிகளின்படியே மயங்கி நிற்கும். இரண்டும் சேர்ந்து முன்னின்ற ஒற்றேடு மயங்குதலில்லை ஆதலின் ஈரொற்று உடனிலை மயக்கம் என்பதொன்றில்லை என்பது தானே புலப்படும்.

அற்றன்று இவையும் மயக்கவிதிபற்றியே எழுந்தவை எனின் முன்னர் நூன்மரபிற் கூறிய

யரழ என்னும் புள்ளி முன்னர்
முதலாகெழுத்து ஙகர மோடு தொன்றும்

என்னும் நூற்பாவிலேயே இம்மயக்கவிதி அமைந்து கிடத்தலின் ஈண்டும் கூறுதல் கூறியது கூறலாய் முடியும். இவை ஈரொற்றுடனிலையாதலின் பிரித்துக் கூறப்பட்டதெனில் அந்நூற்பாவையடுத்து ஆண்டே கூறியிருப்பார் என்க. ஆண்டுக் கூருமல் மொழி மரபின்கண் கூறியுள்ளமையாலும், ஒருமொழிக்குள் தனி ஒற்ருக மயங்காத யகர வகரங்களை நீக்கிக் கூறியுள்ளமையாலும் இந்நூற்பா மொழியியல்பு கூற எழுந்ததே என்பது நன்கு தெளிவாகும்.

இனி இவற்றின் பொருளைக் காண்போம்.

யாழ என்னும் மூன்றுமுன் ஒற்றக்
கசதப ஙஞநம ஈரொற்ருகும்

பொருள்:— ஒரு மொழியின் இடையே யரழ என்னும் மூன்றும் ஒற்ருய் நிற்க அவற்றின் பின்னர் கசதப ஙஞநம என்னும் ஒற்றெழுத்துக்கள் தொடர்ந்து (தனித்தனி) ஈரொற்ருய் இணைந்து நிற்கும்.

எடுத்துக்காட்டு:—

ஏய்க்கும்—வாய்ச்சி—பாய்த்துள்—வாய்ப்பு—வேய்ங்குழல்
வேய்ச்சிறை—பாய்ந்தான்—வேய்ம்புதல் எனவும் [இவற்றுள் வேய்ங்குழல் — பண்புத்தொகை வேயாகியகுழல் என்பது பொருள்]
வேய்ஞ்சிறை — பண்புத்தொகை — வேயாகியவேலி என்பது பொருள்
வேய்ம்புதல்-பண்புத்தொகை-வேயாகியபுதர் என்பது பொருள்
மீர்க்கு—நேர்ச்சி—சீர்த்தி—பார்ப்பு—ஈர்ங்குழல்
கூர்ஞ்சிறை—நேர்ந்தான்—கூர்ம்பனை— எனவும்.

[இவற்றுள் ஈர்ங்குழல் — பண்புத்தொகை —தண்ணிதாய கூந்தல் என்பது பொருள்.
கூர்ஞ்சிறை—பண்புத்தொகை—கூரியதாகிய சிறகு என்பது பொருள்.
கூர்ம்பனை—பண்புத்தொகை—கூரியதாகிய பனைமரம் என்பது பொருள்]

வாழ்க்கை—சூழ்ச்சி—வாழ்த்து—காழ்ப்பு
பாழ்ங்குடில்—பாழ்ஞ்சிறை—வாழ்ந்தார்—பாழ்மதில் எனவும்

இவற்றுள் பாழ்ங்குடில் — பாழ்ஞ்சிறை — பாழ்மதில் என்பவை

பண்புத்தொகை பழமாகியகுடி — பாழாகியவேலீ — பாழாகிய மதில் என்னும் பொருளன]

மெல்லினந் தொடர்ந்த ஒருமொழிகளே அரியவாகலின் ஒருசொல் நடையவாய தொகைமொழிகள் காட்டப்பெற்றன. புணர்மொழிகளாயின் மேற்கூறிய மயக்க விதியுள் அடங்குமாதலின் ஈண்டைக்காகா என்க.

நச்சினர்க்கினியர் இந்நூற்பா மயக்கவிதி கூறியதாக கருதிஞர் மயக்கம் ஒருமொழிக்கண்ணு தைவிபது அவர் கோட்பாடாதலின். தேங்ஞ்சது என்னும் (தேய்ந்தது) பிழை வழக்கை உதாரணங் காட்டினர் தாள்குலே — நேர்குலே என்னும் உதாரணங்களைக் காட்டி இவை வினைத்தொகையென்ருர் இவை தாழும் — நேரும் என்பவற்றின் திரிபாகிய செய்யும் என்னும் எச்சமாகலின் வினைத்தொகையெனில் நிரம்பாது.

இனி இரெட்டியார் அவர்கள் தனிமொழிக்கண் யகர ரகர ழகர மெய்களுக்கு முன் முறையே ஙக—ஞச—நத மா; இவை இணைந்துஈரொற்ருய் நிற்குமென இச்சூத்திரத்திற்குப் பொருள்கூறி

	ங்க	ஞ்ச	ந்த	ம்ப
ய	———	தேய்ஞ்சுது	மேய்ந்தது	மொய்ம்பு
ர	———	———	சேர்ந்தது	———
ழ	———	———	வாழ்ந்தது	———

எனவரும்.

எனச் சிலவற்றிற்கு எடுத்துக்காட்டுத்தந்து ஏனைய வந்துழிக் காண்க என வரைந்துள்ளார். இதுவே ஆசியர் கருத்தாயின்

யரழ வென்னும் மூன்றுமுன் ஒற்ற
ஙஞநம கசதப ஈரொற்ருகும் —

என நூற்பாவை அமைத்திருக்கலாம்—கொண்டு கூட்டலாமெனின் இவைஇவ்வாறு இரண்டிரண்டாக இணைந்து வருமென்பதே ஆசிரியர் கருத்தாயின் ''ஙஞநம கசதப இணைத்தீரொற்ரும்'' என விளங்க ஓதியிருக்கலாம் மற்றும் இரெட்டியாரவர்கள் இந்நூற்பாவினுள் வரும் யரழக்களையும் ஙஞநமக்களையும் ஒற்ருகவும் கசதபக்களை உயிர்மெய்யபகவும் கருதுகின்ருர். அவ்வாறு கருதுதற்கான குறிப்பொன்றும் நூற்பாவிற் காணப்படவில்லை, ஆசிரியர் கருத்து அதுவாயின் சிறிதும் மயங்குதற் கிடனின்றி

''யரழ எனுமூன் ரெற்றுமுன் ஙஞநம
இனத் துடனிணைந்தவை ஈரொற்ருகும்'' என விளங்கச் சூத்திரம் வரைந்திருப்பார், மேலும் ''ஞநமவ'' என்னும் நூற்பா உரையுள் நச்சினர்க்கினியர் உதாரணம் இக்காலத்திறந்தன என்று

கூறியுள்ளவிடத்து அவரை பறுத்துக் கூறுமிவர் ஈண்டுச் செம்பாதிக்கும் மேல் உதாரணங்காட்டாமல் விடுத்து உதாரணம் வந்தவழிக் கண்டுகொள்க எனக் கூறுவது மாமியார் நியாயத்தை ஒத்துள்ளது. இவ்வாறு இவர் தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி உரையுள் நூற்கருத்துக்குமாறாக விளக்கங்கூறுமிடங்கள் பலவுள அவைபற்றி நேர்ந்துழிக் காட்டுவாம்.

அடுத்த நூற்பா:— அவற்றுள்

ரகார ழகாரங் குற்றொற்றாகா

இதன் பொருள் :— மேற்கூறிய யரழக்களுள் ரகரமும் ழகரமும் கசதப முதலியவற்றோடு இணைந்து ஈரொற்றாய் நிற்குங்கால் தனிக் குற்றெழுத்தைச் சார்ந்து நிற்கமாட்டா, என்பதாம்.

எனவே இவை நெட்டெழுத்தைச் சார்ந்து நிற்கும் என்பதும் யகரம யின தனிக் குற்றெழுத்தையும் நெட்டெழுத்தையும் சார்ந்து நிற்கும் என்பதும் பெறப்படும்.

எ, டு. :— மேலே காட்டப்பெற்றன. யகரம் குற்றெழுத்தைச் சார்ந்தது நிற்றற்கு உதாரணம :— துய்க்க— பொகுச்ய்ள்—நெய்த்தோர் — துய்ப்போர் — அய்ங்கனே — அய்ஞ்சுனே — உய்ந்தான் மொய்ப்பன் எனவரும் இவற்றுள் போலி எழுத்தோடு நிற்கும் அய்ங்கணே—அய்ஞ்சுனே என்பவை பண்புத் தொகைகள் ஐந்தாகிய அம்பு — ஐந்தாகிய சுவை என்பவை பொருள்.

இனி நிகர்க்கும்—கவர்ச்சி— உவவர்த்தல்—துவர்ப்பு—பகர்ந்தார் எனவும் முகிழ்க்கும் — புகழ்ச்சி — நிகழ்த்தும் — கவிழ்ப்பார் திகழ்ந்தார் எனவும் ரகரழகரங்கள் குறிலைச் சார்ந்து வருதலின் ஆகா என்றது பொருந்துமா றென்னே யெனின், இவை இணைக்குறிலா கலின ஓசை வகையா (மாத்திரையா)ன் நெட்டெழுத்து இயல்பின வாகலின் பொருந்து மென்க. ஆசிரியர் இதனை

குறுமையும் நெடுமையும் அளவிற் கோலின்
தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத் தியல் ( )

என விதந்து கூறுமாற்றான் அறியலாம்.

மற்று ''ரகார ழகாரந் தனிக் குற்றொற்றாகா'' எனச் சூத்திரம் செய்திருப்பின் தொடர்மொழிகண் வரும் என்பதுதானே பெறப் படுமாகலின் அங்ஙனம் கூறாமல் '' குறுமையும் நெடுமையும் '' என மற்றொரு நூற்பாக் கூறியதனாற் பயன் என்னை எனின்? கூறுதும்:

மொழி மரபிற் கூறும் இலக்கணங்கள் பின்னர் வரும் புணர் மொழிச் செய்கைகட்கு கருவியாகலின் ஆண்டு பயன்படுதல் வேண்டி ஈண்டு எதிரது போற்றிக் கூறப்பட்டதென்க அஃதாவது தொகை மரபின்கண்.

நெடிய தன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்
குறிய தன் முன்னர்த் தன்னுருபு இரட்டலும்
அறியத் தோன்றிய நெறியியல் என்ப ''
(எழு—தொகை—18)

என்னும் விதி, கோல் + தீது = கோறீது—கோல் + நன்று = கோனன்று
வேள் + தீயன் = வேடீயன் — வேள் + நல்லன் = வேணல்லன்
என வரும் நெட்டெழுத்தின் பின்வரும் ஒற்றுகட்கேயன்றி

கனல் + தீது = கனறீது புனல் + நன்று = புனனன்று
துகள் + தீது = துகடீது — துகள் + நன்று = துகணன்று

எனவும், தோன்றல் + தீயன் = தோன்றறீயன் = தோன்றல் + நல்லன் தோன்றனல்லன் எனவும் இரண்டு முதலாகத் தொடர்ந்து நிற்கும் குற்றெழுத்துக்களுக்கும் எய்துதலின் - அவிவற்றின் இயல்பினை நன்கு ஓர்ந்து தனிக்குறில் தவிரப் பிறவாறு தொடர்ந்து வருவனவற்றை அவ்விதியான் எய்துதற்பொருட்டுத் தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத்தியல என ஓதினர், ஆசிரியர் என்க.

ஆசிரியர் ஈண்டு ''நெட்டெழுத்தா'' மென ஓதாது புணர்மொழி களிலும் மொழி யாக்கங்களிலும் அவை ஓசைவகையகன் நெட் டெழுத்தின் இயல்பினைப் பெறுமென விளக்குவாராய் **நெட்டெழுத்தியல** என ஓதினர். இதனை ஓராத நச்சினார்க்கினியர் இந் நூற்பாவிற்கு உண்மையுரை வரைந்த இளம்பூரணருரை மறுத்து ஈண்டு எவ்வாற்றானும் இயைபில்லாததோர் உரையைக் கூறிச் சென்றார். அதுநிற்க

''ரகாரழகாரங் குற்றொற்றாகா'' என்பதற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ரகார ழகாரங்கள் நெடிற்கீழ் ஒற்றும் குறிற்கீழ் உயிர்மெய்யாம் என உரை கூறித் நார் — தாழ் — கரு — மழு என எடுத்துக்காட்டும் வரைந்துள்ளனர், இவர்தம் கருத்து ரகார ழகாரங்கள் குறிற்கீழ்வந்து மொழியாக்கம் பெற்று நில்லாதென் பதே யாகும். அவ்வாறாயின் ஆசிரியர் அர் ஆர்ப என வருஉம் மூன்றும் (சொல்—வினை—8) எனவும் இர் ஈர் மின் எனவருஉம் (சொல்—வினை—27) எனவும் தனிக்குறிலைச் சார்ந்து அர்—இர் என

வருதலை ஒதினமையானும், அவை விகுதி இடைசொல்லாய் திணையும் பாலும் காட்டி நிற்கின்றமையானும் அவர்தம் கருத்து நிரம்பாதென்பது புலனும்.

அன்றியும், 'அவற்றுள்' என இந்நூற்பா முதற்கண் சுட்டுவது வேண்டா கூறலாய் முடியும். அதனால் தனிமொழிக்கண் இடையே ஈரொற்று உடனியைந்து நிற்றற்கண் யகர ரகர ழகரங்களுள் யகரம் குறிற் பின்னரும் நெடிற் பின்னரும் வருமென்றும் ரகர ழகரங்கள் நெடிற் பின்னரும் இணைக்குறிலசய தொடர்ச்சியின் பின்னரும் வரும் என்றும் அமைப்பதே இவ் இரண்டு நூற்பாக்களின் கருத்தென்பது தெளிவாம்,

இனி அடுத்த நூற்பாவின் பொருளைப் பார்ப்போம்.

> செய்யுளிறுதிப் போலி மொழிவயின்
> னகார மகாரம் ஈரொற்றாகும். (மொழி—)

பொருள் :— செய்யுளுள் போலும் என்னும் மொழியிறுதிக்கண் னகாரமும் மகாரமும் இணைந்து ஈரொற்றாய் நிற்கும்,

ஆக மொழியிறுதியில் ஈரொற்று உடன் நிற்றல் செய்யுள் வழக்கென்று கூறியதனால் "யரழ என்னும் மூன்று முன் ஒற்ற" என்னும் நூற்பாவிற் கூறிய ஈரொற்றுக்கள் மொழியிடையே நிற்கும் என்பதும் அவை இருவகை வழக்கிற்கும் பொதுவென்பதும் பெறப்படும்.

போலிமொழி என்றது போலும் என்னும் உவம இடைச் சொல்லை. இதனைப் போலி என ஆசிரியர் வழங்குதலை

"ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும்" என்னும் நூற்பாவால் அறியலாம். இந்நூற்பாவால் அஃது அசைநிலை இடைச் சொல்லாகவும் வரும் என்று தெரியலாம்.

எ-டு :— திசையறி மீகானும் போன்ம் (பரிபாடல்)

வஞ்சினம் வாய்த்தானும் போன்ம் (முல்லைக்கலி - 1)
பெருங்கல் லடாரும் போன்ம் எனவிரும்பி (புறம் - 19)

எனவரும்

இந்நூற்பாவை செய்யுளுள் போலிமொழியினிறுதி ஈரொற்றாகும் எனக்கொண்டு கூட்டாமல், செய்யுளினிறுதிக்கண் போலி மொழிவயின் என்றும் போலி மொழி இறுதி வயின் என்றும் கூட்டி உரையாளர்கள் இடர்ப்படுவர். எவ்வாறாயினும் செய்யும் என்னும்

வாய்ப்பாட்டினதாகிய ''போலும்'' என்னும் சொல்லின்கண்ணே தான் இது நிகழும் என்பதில் அவர்கட்கு கருத்து மாறுபாடில்லை. எனினும், இடைக்காலத்தே

'' மருளினும் எல்லாம் மருண்ம் '' எனவும்
'' உட்சியுட் சாரி கலும்ம் '' எனவும்

தோன்றி வழங்கலாயின.

இவற்றுள் மேலதனை அடக்கி நன்னூலார்

லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்தீ ரொற்றும் செய்யுளுள்ளே (நன்—120)

எனச் சூத்திரம் செய்தார். இவற்றைக்

'' கடிசொல்லில்லைக் காலத்துப்படினே '' என்பதனாற் கொள்ளலாம், இவ்வாறு மொழி இடையிலும் இறுதியிலும் தனித்து ஈரொற்றாய் நிற்பனவும் மேல் வரும் உயிர்மெய்யின்கண் உள்ள ஒற்றும் முன்னர் நூன்மரபிற் கூறிய மயக்க விதிகளுக்கு முரணுமற் பொருந்தி நிற்றலைக் காணலாம்.

இதுகாறுங் கூறியவாற்றான் மூவின மெய்களும் மொழிக்கண் தம்முன் தொடர்தல் மட்டுமே மெய்ம்மயக்கம் என்பது ஆசிரியர் கருத்தென்பதும், நின்ற மெய்யோடு வருமெய் கூடி நிற்பதே மயக்கம் என்பதும், மயக்கம் ஒருமொழி தொகைமொழி தொடர் மொழி(புணர்மொழி) கட்கெல்லாம் பொதுவென்பதும், மயக்க விதி வேறுபுணர்ச்சி விதி வேறு என்பது மயக்கவிதி கருவி, புணர்ச்சி விதி செய்கை என்பதும், மெய்ம் மயக்கத்தை இடைநிலை மயக்கம் என வரைதலும் வேற்றுநிலை, உடனிலை எனப் பிரித்தலும் ஆசிரியர் கருத்தன்று என்பதும், அங்ஙனம் இங்ஙனம் முதலாயவை பிரிப்பப் பிரியா ஒரு சொற்கள் என்பதும் ஙனம் என்பதை ஒரு சொல்லாகப் பிரித்தலும், அங்கனம், இங்கனம் எனத்திரித்தலும் ஒல்லா என்பதும், மொழி மரபிற் கூறிய ஈரொற்றுடனிலை ஒரு மொழிக்கண் இடையிலும் இறுதியிலும் ஈரொற்றுக்கள் இணைந்து தனித்து நிற்குமென மொழி மியல்பு கூறியதன்றி மயக்க விதி கூறியதன்று என்பதும் பிறவும் பெறப்படும்.

நிறைவுற்றது.

———

"ஈரொற்றுடனிலை"

டாக்டர் ஏ. ஆதித்தன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

தொல்காப்பியனார் மெய்கள் தம்முள் மயங்கும் நிலையினை இரு வகையாகச் சுட்டுகின்றார்.[1]

தொல்காப்பியனார் குறிக்கும் 'மெய்ம்மயங்கு' என்பதனை வேற்றுநிலை மெய்ம்மயக்கம் (Consontal cluster) எனவும் 'உடனிலை' என்பதனை உடனிலை மெய்ம்மயக்கம் (Gemination) எனவும் உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.[2]

மொழியியல் அடிப்படையில் பெரும்பாலும் 'உடனிலை என்பதனை மெய்ம்மயக்கமாகக் (cluster) கருதாது மெய் இரட்டித்தல் (gemination) என்றே கருதுவர்.

உரையாசிரியர்கள், இலக்கண அறிஞர்கள் வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தினை தொல்காப்பிய நூற்பாக்களை அடிப்படையாகக் கொண்டு இரண்டு வகையாகப் பகுப்பர்.

1. இரண்டு மெய்கள் மயங்கி வருவது (two consonantal cluster).

2. மூன்று மெய்கள் மயங்கி வருவது (three consonantal cluster).

மூன்று மெய்கள் மயங்கி வரும் மயக்கம் பற்றிய செய்தியினை ஆய்வதே இக்கட்டுரை. மூன்று மெய்கள் மயங்கி வருவது பற்றிய செய்தியினைச் சுட்டும் தொல்காப்பிய நூற்பாவாக உரையாசிரியர்கள் அனைவரும் கீழ்க்காணும் நூற்பாவினைக் கூறுகின்றனர்.

யரழ என்னும் மூன்றும் ஒற்றக்
கசதப ஙநம ஈரொற்றாகும்.

(தொல். எழுத்து: 48)

இந்நூற்பாவிற்கு உபதலைப்பாக 'ஈரொற்றுடனிலை' என்பதனை உரையாசிரியர்கள் இருவரும் குறிக்கின்றனர். இத்தலைப்பு தொல்காப்பியனாரால் கூட குறிக்கப் பெற்றதாக இருக்கலாம். எனவே, மூன்று மெய்கள் மயங்கி வரும் மயக்கத்தினை 'ஈரொற்றுடனிலை' என்று குறிக்கின்றனர் என்பது வெள்ளிடைமலை.

இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் மூன்று மெய்கள் மயங்கி வருவதனை 'ஈரொற்றுடனிலை' எனக் குறிக்கின்றனர்.[3]

இவ்விரு உரையாசிரியர்களும் பிறிதோர் இடத்தில் மொழி இறுதியில் இரண்டு மெய்கள் மயங்கி வருவதனைச் சுட்டுங்கால் அவ்விடத்தும் 'ஈரொற்றுடனிலை' என்ற சொல்லாட்சியினைக் குறிக்கின்றனர்.

> ''செய்யுள் இறுதிக்கண் போலும் என்னும்
> மொழிக்கண் ளகரமும் மகரமும் வந்து
> ஈரொற் றுடனிலையாய் நிற்கும்'' (போன்ம்)'
> —இளம்பூரணர், தொல்காப்பியம்: பக். 34.

> ''செய்யுட்கண் போலுமென்னுஞ் சொல்லின்
> இறுதிக்கண் ளகரமும் மகரமும் வந்து
> ஈரொற்றுடனிலையாய் நிற்கும்'' (போன்ம்).
> நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் பக். 48.

உரையாசிரியர்கள் இரண்டு மெய்கள் மயங்கும் நிலையினையும் மூன்று மெய்கள் மயங்கும் நிலையினையும் 'ஈரொற்றுடனிலை' என்ற சொல்லாட்சியால் குறிப்பிடுதலைக் காண முடிகின்றது.

அடுத்து, மூன்று மெய்கள் மயங்கிவரும் மயக்கம் பற்றி விரிவாகக் காணலாம். 'ஈரொற்றுடனிலை' பற்றிய நூற்பாவில் வருகின்ற 'ஈரொற்று' என்ற சொல்லுக்குத் தொல்காப்பியனார் முழுமையான விளக்கம் தரவில்லை எனலாம். இந்த 'ஈரொற்று' எனும் சொல் ஒத்த இரு மெய்கள் மயங்கி வரும் மயக்கத்தினைச் சுட்டுகின்றதா அன்றி வேறுபட்ட இருமெய்கள் மயங்கி வரும் மயக்கத்தைச் சுட்டுகின்றதா என்பது ஆய்வுக்குரியதாக அமைகின்றது.

இளம்பூரணர் தரும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு இதனைக் காணுங்கால் கீழ்க்காணும் மெய்மயக்கங்களைக் கண்டறிதல் இயலும்.[4]

வேய்க்குறை	-ய்க்க்-	வேய்ங்குறை	-ய்ங்க்-
வேர்க்குறை	-ர்க்க்-	வேர்ங்குறை	-ர்ங்க்-
வீழ்க்குறை	-ழ்க்க்-	வீழ்ங்குறை	-ழ்ங்க்-
வேய்ச்சிறை	-ய்ச்ச்-	வேய்ஞ்சிறை	-ய்ஞ்ச்-
வேர்த்தலை	-ர்த்த்-	வேர்ந்தலை	-ர்ந்த்-
வேய்ப்புறம்	-ய்ப்ப்-	வேய்ம்புறம்	-ய்ம்ப்-

மேற்கூறப்பட்ட சான்றுகளைக் கூறி ''இவ்விதிமேல் ஈற்றகத்து உணர்ந்து கொள்ளப்படுமாலெனின் இது 'ஈர்க்கு', 'பீர்க்கு' என ஒரு மொழியுள்ளும் வருதலானும் இரண்டு மெய்க்கண்ணும் வருதல் விகாரமாதலானும் ஈண்டுக் கூறப்பட்டது'' எனவும், ''அஃதேல் இதனை நூன் மரபினகத்து மெய்ம்மயக்கத்துக்கண் கூறுக வெனின், ஆண்டு வேற்றுமை நயம் கொண்டதாகலின் ஈரொற்றுடனிலை யாதல் நோக்கி ஒற்றுமை நயம் பற்றி ஈண்டும் கூறப்பட்டது'' எனவும் இளம்பூரணர் குறிப்பிடுகின்றார்.

இளம்பூரணர் கருத்துப்படி ய், ர், ழ் என்னும் மூன்று மெய் களுக்குப் பின்னர் க், ச், த், ப் எனும் நான்கு மெய்களின் இரட் டித்த மெய்களின் கூட்டமும், க், ச், த், ப் எனும் மெய்களும் இவற்றின் இனமெல்லொலிகளான ங், ஞ், ந், ம் என்பனவும் இணைந்த இருவேறு மெய்களின் கூட்டமும் வரலாம் என்பது தெரிய வருகின்றது.

நச்சினார்க்கினியர் தரும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு மூன்று மெய்கள் மயங்குவதனைக் காணுங்கால் கீழ்க் காணும் மெய்ம்மயக்கங்களைக் கண்டறிதல் இயலும். 5

வாய்க்க	-ய்க்க்-	காய்ங்கனி	-ய்ங்க்-
வாய்ச்சி	-ய்ச்ச்-	தேய்ஞ்சது	-ய்ஞ்ச்-
வாய்ப்பு	-ய்ப்ப்-	காய்ந்தனம்	-ய்ந்த்-
பீர்க்கு	-ர்க்க்-	காய்ம்புனம்	-ய்ம்ப்-
நேர்ச்சி	-ர்ச்ச்-	நேர்ங்கல்	-ர்ங்க்-
வார்த்தல்	-ர்த்த்-	நேர்ஞ்சிலை	-ர்ஞ்ச்-
ஆர்ப்பு	-ர்ப்ப்-	நேர்ந்திலை	-ர்ந்த்-
தாழ்ச்சி	-ழ்ச்ச்-	நேர்ம்புறம்	-ர்ம்ப்-
தாழ்த்தல்	-ழ்த்த்-	வாழ்ந்தனம்	-ழ்ந்த்-

மேற்கூறப்பட்ட சான்றுகளைக் கூறி ''ழகரத்திற்கு 'வாழ்ந் தனம்' என இக்காலத்து நகரவொற்று வரும். ஏனைய மூன்றும் இக்காலத்து வழங்கு மெனின் உணர்க'' எனவும் இனி நெடிற்கீழே யன்றிப் பலவெழுத்துக்கள் தொடர்ந்து நின்று தன் பின்னும் ஈரொற்று வருதல் கொள்க. அவை 'நேர்ந்தார்க்கு, அன்னாய்க்கு என்றார்போல்வனவாம்' எனவும் நச்சினார்க்கினியர் குறிப்பிடு கின்றார்.

நச்சினார்க்கினியர் கருத்துப்படி ய், ர், ழ் என்னும் மூன்று மெய்களுக்குப் பின்னர் க், ச், ப், த் போன்ற மெய்களின் கூட்ட

மும், ச், ச், த், ப் என்பவற்றின் இனமெல்லெழுத்துக்கள் இணைந்த இருவேறு மெய்களின் கூட்டமும் வரலாம் என்பது புலனாகின்றது.

இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் ய், ர், ழ் எனும் மெய்களுக்குப் பின்னர் மெல்லெழுத்துக்கள் இரட்டித்து வரும் என்பதனைக் குறிக்கச் சான்றுகள் தரவில்லை. இவ்விரு உரையாசிரியர்கள் முதன்மைதரும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு ய், ர், ழ் என்னும் மூன்று மெய்களுக்குப் பின்னர் உடனிலை மெய்கள் (geminatec consonants) மட்டுமே வந்து மூன்று மெய்கள் மயங்குமென சில இலக்கண அறிஞர்கள் கருதுகின்றனர். ய், ர், ழ் என்னும் மூன்று மெய்களுக்குப் பின்னர் உடனிலை மெய்கள் மட்டுமே வந்து மூன்று மெய்கள் மயங்கும் எனத் தொல்காப்பியர் கருதியிருந்தால் அவரது தொல்காப்பிய மொழியிலே இதற்குப் புறம்பான மூன்று மெய்கள் மயங்கும் நிலையினைக் காணமுடியுமா? 'ய், ர், ழ் வரிசையில் 'ர்' என்னும் மெய்யெழுத்துக்குப் பின்னர் உடனிலை மெய்யல்லாத -ர்ந்- வந்து மூன்று மெய்கள் மயங்கும் நிலையினைத் தொல்காப்பிய மொழியில் காணமுடிகின்றது.

—ர்ந்த்— அயர்ந்த

(தொல். பொருள்: 63: 2)

வெங்கடராஜுலு ரெட்டியார் இத்தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையெழுதும்போது ய், ர், ழ் என்னும் மூன்று மெய்களுக்குப் பின்னர் க், ச், த், ப் என்னும் நான்கு வல்லின மெய்களும் அவற்றிற்குரிய இனவெழுத்துக்கள் (homarganic sounds) ங், ஞ், ந், ம் என்பனவற்றோடு இணைந்து மூன்று மெய்களாக மயங்கி வரும் எனக் குறிக்கின்றார்.[6] இவருடைய கருத்துப்படி ய், ர், ழ் என்னும் மெய்களுக்குப் பின்னர் மெல்லினத்தைச் சார்ந்த உடனிலை மெய்கள் வருவதில்லை. ஆனால் தொல்காப்பிய மொழியிலே இவர் கருத்துக்குப் புறம்பான நிலையைச் சுட்டும் சான்றினைக் காண முடிகின்றது.

—ய்ம்ம்— மெய்ம்மை

(தொல். எழுத்து: 151)

உரையாசிரியர்களும், ய், ர், ழ், எனும் மெய்களுக்குப் பின்னர் மெல்லின உடனிலை மெய்கள் வருவதனைச் சுட்டவில்லை தொல்காப்பியனார் காலத்தில் வழக்கிலிருந்து பின்பு இத்தகைய மெய்மயக்கங்களை உடைய சொற்கள் உரையாசிரியர்கள் காலத்தில் வழக்கிறந்திருக்கலாம் என்று கருதப்படும் கூற்று ஈண்டு நினைவு கூரத்தக்கது.

தொல்காப்பியனார் சுட்டும் " ய, ர, ழ என்னும் ...." நூற்பாவில் அமையும் 'ஈரொற்று' எனும் சொல்லாட்சி உடனிலை மெய்களைக் குறிக்கின்றதா அன்றி வேறு வேறு மெய்களின் கூட்டத்தைக் குறிக்கின்றதா என்பது பிரச்சினைக்குரிய ஒன்றாக அமைகின்றது.

தொல்காப்பியனார் எழுத்ததிகாரத்தின்கண் பிறிதோர் இடத்திலும் 'ஈரொற்று' என்னும் சொல்லாட்சியினைப் பயன்படுத்தியுள்ளார்.

> "செய்யுள் இறுதிப்போலி மொழிவயின்
> னகார மகாரம் ஈரொற்றாகும்."
>
> (தொல். எழுத்து: 51)

இங்குக் குறிப்பிடப்படும் 'ஈரொற்று' என்ற சொல்லாட்சி வெவ்வேறு இரு மெய்கள் மயங்கும் வேற்றுநிலை மயக்கத்தையே (—ன்ம்—) சுட்டி நிற்கக் காண்கின்றோம். எனவே 'ஈரொற்று' என்பது இருவேறு மெய்களின் கூட்டத்தைச் சுட்டவும் பயன்படுத்தப்படுகிறது என்பது புலனாகின்றது.

மேற்கூறப்பெற்ற நிலைகளிலிருந்து கீழ்க்கண்ட சில முடிவுகளுக்கு வரலாம்.

1 மூன்று மெய்கள் மயங்கி வரும் மயக்கத்தை ஈரொற்றுடனிலை என்று குறிக்கும் உரையாசிரியர்கள் இரண்டு மெய்கள் மயங்கி வருதலையும் இதே சொல்லாட்சியால் குறிப்பிடுவது பிரச்சினைக்குரிய ஒன்றாக அமைகின்றது.

2 தொல்காப்பியனார் பயன்படுத்தும் சொல்லாட்சியான 'ஈரொற்று' என்பது இரண்டு மெய்களின் கூட்டத்தையே குறிக்கும் இது ஒத்த இருமெய்களது கூட்டமாகவும் இருக்கலாம். அன்றி வேறுபட்ட இரு மெய்களின் கூட்டமாகவும் இருக்கலாம்.

3 தொல்காப்பியனாரால் குறிக்கப் பெறும் மூன்று மெய்களின் மயக்கங்களில் பல உரையாசிரியர்கள் காலத்தில் அழிந்துபட்டிருக்கலாம் என்பதால் அனைத்து மெய்மயக்கங்களுக்கும் உரையாசிரியர்கள் சான்றுகள் தராது விட்டிருக்கலாம் என்ற கருத்து ஏற்புடையதாகும்.[7]

குறிப்புக்கள்:

1 "அம்மூவாறும் வழக்கியல் மருங்கின்
மெய்ம்மயங் குடனிலை தெரியுங்காலை"

தொல்காப்பியனார் "மெய்ம்மயங்கு", "உடனிலை" என இருவகை மயக்கங்களைச் சுட்டுகின்றார்.

- தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரை, நூற்பா: 22.

2 இளம்பூரணர், தொல்காப்பியம் — எழுத்ததிகாரம், நூற்பா: 22.
நச்சினார்க்கினியர், தொல்காப்பியம்— எழுத்ததிகாரம், நூற்பா: 22

3 இளம்பூரணர், தொல்காப்பியம் — எழுத்ததிகாரம், நூற்பா: 48.
நச்சினார்க்கினியர், தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூற்பா: 48

4 இளம்பூரணர், தொல்காப்பியம் —எழுத்ததிகாரம், நூற்பா. 48

5 நச்சினார்க்கினியர், தொல்காப்பியம்—எழுத்ததிகாரம், நூற்பா: 48

6 வெங்கடராஜுலு ரெட்டியார், எழுத்ததிகார ஆராய்ச்சி, பக்கம், 50

7 தொல்காப்பியனார் விதிப்படி பின்வரும் மெய்மயக்கங்கள் இடம் பெற முடியும்.

—ய்க்க்—	—ழ்க்க்—	—ய்ங்க்—
—ய்ச்ச்—	—ழ்ச்ச்—	—ய்ஞ்ச்—
—ய்த்த்—	—ழ்த்த்—	—ய்ந்த்—
—ய்ப்ப்—	—ழ்ப்ப்—	—ய்ம்ப்—
—ர்க்க்—	—ழ்ங்ங்—	—ர்ங்க்—
—ர்ப்ப்—	—ழ்ஞ்ஞ்—	—ர்ஞ்ச்—
—ர்த்த்—	—ழ்ந்ந்—	—ர்ந்த்—
—ர்ப்ப்—	—ழ்ம்ம்—	—ர்ம்ப்—
—ய்ங்ங்—	—ர்ங்ங்—	—ழ்ங்க்—
—ய்ஞ்ஞ்—	—ர்ஞ்ஞ்—	—ழ்ஞ்ச்—
—ய்ந்ந்—	—ர்ந்ந்—	—ழ்ந்த்—
—ய்ம்ம்—	—ர்ம்ம்—	—ழ்ம்ப்—

——0——

கவிஞன் நோக்கு

தஞ்சை
—பா. இறையரசன்.

1. படி, படை:

''நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல், இமைப் பொழுதும் சோராதிருத்தல்'' என வாழும் கவிஞன் தன் பரிசில் வாழ்க்கையில் (பரிசிலுக்கான வாழ்க்கை, பரிசிலான வாழ்க்கை, பரிசில்லா வாழ்க்கை, பரிசில் அமைந்த வாழ்க்கை) பார்ப்ப தெல்லாம் படிக்கிறான்; வார்ப்பதெல்லாம் படைக்கிறான். 'கண் டது கற்கப் பண்டிதனாவான்'; நாவசைந்தால் பாவிசையும். சட்டியிலிருந்தால் அகப்பையில் வரும்'; 'தாளாற்றித் தந்ததை' யன்றோ வேளாண்மை செய்யலாம். 'வாழ்க்கையிலிருந்து இலக் கியம் முகிழ்க்கிறது' என்பர் அறிஞர். வாழ்க்கையை நன்கு படித்த கலைஞன் நன்கு படைக்கிறான். உணர்ந்தால்தானே உணர்த்த முடியும்.

''காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு''

குறள்: 849.

கல்லாதான் சொற்காமுற்று என் செய? கல்லாதான் ஒட்பம் எற் றுக்கு? கற்றான் ஒட்பமுடன் உணர்த்தின் பொன்மலர் நாற்ற முடைத்தன்றோ!

2. கண், புண்:

கண்ணுடையர் என்பவர் கற்றோர்; கற்றோர் என்போர் கண் ணுடையர். கண் என்பது அறிவுக்கண், அன்புக்கண், அருட்கண், மனக்கண் என்பவற்றை உள்ளடக்கும். இவற்றுக்குதவாத புறக் கண் புண்ணென்னும் புன்மைத்து. 'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்பது அவர்தம் நுண்மாண் நுழைபுலக் கண்ணாலன்றோ! சிறந்த ஓவியக் கலைஞர்களைக் 'கண்ணுள் வினைஞர்' என்பதும் காண்க.

''கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே''

தொல். மெய். 27

3. காட்சி, ஆட்சி

''எங்கெங்கு காணினும் சக்தியடா!
ஏழு கடல் அவள் வண்ணமடா!''

என்று கவிஞன் எங்குப் பார்த்தாலும் தான் காண்பதையே காண்கிறான் — சீதையை நினைந்து கண்ட இராவணனைப் போல்! 'காண்பன எல்லாம் அவையே போறல்' கருத்தாலன்றோ!

''மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே''

எல்லாவற்றையும் ஒன்றாகப் பார்ப்பதும், ஒன்றைப் பலவாகப் பார்ப்பதும் கவிஞன் இயல்பு.

''மாசறு பொன்னே ! வலம்புரி முத்தே !
காசறு விரையே ! கரும்பே ! தேனே !
அரும்பெறற் பாவாய் ! ஆருயிர் மருந்தே !
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே''

பொன், வெள்ளி, வைரம், மணிகள் ஆகிய பலவற்றை இழைத்து இணைத்து ஒரு அணிகலனாகக் காண்பதும், ஒரு பொன்னை எடுத்துப் பலவகை அணிகலன்களாகச் செய்வதும் பொற்கொல்லர் வாழ்வன்றோ! தாம் கண்ட காட்சியைச் சொற்செல்வர் கவிதை ஆட்சியிலேற்றுவதைக் 'கற்பனை' என்றும், கவிதை ஆட்சியில் வரும் கருத்துக்களைக் கற்பனைக் காட்சியிலேற்றுவதைத் 'தற்குறிப்பேற்ற அணி' என்றும் கூறுகிறோம். இதனை இயைபுக் கற்பனை, கருத்து விளக்கக் கற்பனை என்று திறனாய்வாளர் கூறுவர்.

4. நோக்கு, போக்கு:

காணும் காட்சி ஒன்றாயினும் பார்வை பலவாதல் பார்க்கிறோம். நிலா ஒன்றுதான்; சங்க காலத்திலிருந்து இன்றுவரை பலர் பலவாறு பாடியுள்ளார்கள். புறக்கண் நோக்கு ஒன்றாயினும் கவிதைப் போக்குப் பலவாக; காரணம் அகக்கண் நோக்கு வேறுபடுவதே. இலக்கியப் போக்குகள் பலவாயினும் கலைஞன் என்ற அகக்கண் நோக்கு ஒன்றுபடும். சைவ இலக்கியம், வைணவ இலக்கியம், சமண இலக்கியம் போன்ற அனைத்தும் இலக்கிய நோக்கில் ஒன்றுதானே! பன்மையில் ஒருமையும், ஒருமையில் பன்மையும் நோக்கும் போக்கும் வேறுபடுவதும் ஒன்றுபடுவதும் உண்டாக்குவதே!

—தொடரும்.